Panchayats Lands for Rural-Manpower Programme

* 240 Q.—Thiru S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the total acreage of vested lands in the Panchayats that have been reclaimed under the Rural-Manpower Programme, district-wise during 1970-71 and 1971-72?

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ஊராட்சிகளின் நிலங்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1970–71, 1971–72 ஆண்டுக் காலத்தில் மாவட்ட வாரியாக, கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊராட்சிகளின் அதிகாரத்துக்குட்பட்ட நிலங்களில் மொத்தம் எத்தனை ஏக்கர் நிலங்கள் பண்படுத்தப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கிராம ஆட்படை ஊற்றத் திட்டத்தின்கீழ் 1970–71, மற்றும் 1971–72 ஆண்டுகளில் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலங்கள் எவையும் பயன் படுத்தப்படவில்லை.

Endowments of Private Aided Institutions

* 241 Q.—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether private aided institutions are required to invest their endowments only in the Tamil Nadu Industrial Investment Corporation Limited; and

(*b*) if so, the reasons therefor?

மானியம் பெறும் தனியார் நிறுவனங்களின் அறநிதி

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் தனியார் நிறுவனங்கள் தங்களுடைய அறநிதியை தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில்தான் முதலீடு செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தனியார் பள்ளியில் இருக்கக் கூடிய என்டோமெண்ட் முழுவதையும் தமிழ்நாடு இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனில் போட வேண்டும் என்று நிச்சயமாக நிர்ப்பந்திக்கப்பட்டு தனியார் பள்ளிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். அப்படி ஏதாவது கட்டாயப் படுத்தும் சுற்றறிக்கை இருக்குமேயானால், அதை வலியுறுத்தாதபடி எது அந்தப் பள்ளிகளுக்குச் சாதகமோ அந்த வங்கியில் போடலாம் என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஆணையில் "நாஷனல் டிபென்ஸ் சர்டிபிகேட்ஸ்", நாஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்ஸ், தமிழ்நாடு இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன்—இந்த மூன்றில், ஒன்றில் போடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, இதிலே மட்டும் போட வேண்டும் என்று சொல்லப்படவில்லை.

Grade II Tamil Pandits

* 242 Q.—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of Grade II Tamil Pandits serving in the High Schools in the Dindigul Municipality who are qualified for Grade I salary;

(*b*) whether they have all been granted their Grade I salaries sanctioned to them by the Government; and

(*c*) if not, the reasons therefor?

இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் பணி யாற்றும் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள் எத்தனை பேர் முதல்